**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.**

**STC. No. 36 of 2023**

**மனுதாரர் தரப்பு சாட்சி ம.சா.1**

2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் நாள் மனுதாரர் தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | Sakthivel | **தொழில்** | |
| **த/பெ(அ) க/பெ.** | | **வயது** | |
| **கிராமம்** | | | |
| **தாலூக்கா** | | | |

நாள்: 14.07.2025

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

என் மனைவி மீது என்ன சொத்து உள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் எனக்கும், என் மனைவிக்கும் ஒன்றரை மாதங்களாக பேச்ச வார்த்தை இல்லை. அதற்கு முன்பாக என்ன சொத்து இருந்தது என்றால் எதுவும் இல்லை. நானும், என் மனைவியும் சாய் மைக்ரோ பைனான்ஸ் என்ற நிதி நிறுவனம் நடத்தி வந்தோம் என்றும், அதில் எவ்வளவு தொகை கடனாக கொடுத்து உள்ளோம் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை தவிர வேறு ஏதாவது வழக்கு நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. கடந்த 23.02.2022ம் தேதியில் புகார்தாரரின் மனைவி ராதிகா எதிரி மீது அரசல்லூர் காவல் நிலையத்தில் பணம் மோசடி செய்ததாக புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி புகார் மனுவில் எதிரி ரூ. 18,50,000/-ஐ என்னிடமும், என் கணவணிடமும் ஏமாற்றி மோசடி செய்து விட்டார் என்ற புகார் விவரம் தங்களுக்கு தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பிரமாண பத்திரிக்கை, புகாரில் மற்றும் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் என்னுடையது தான். அதில் உள்ளவாறு தான் கையெழுத்து செய்வேன் என்றால் சரிதான். புகார்தாரர் மனைவி ராதிகா எதிரியின் மனைவி கோடீஸ்வரி ஆகிய இருவரும் மகளிர் சுய உதவி

குழுவின் மூலம் குழுவிற்கு பணம் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் Ledger உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி Ledger எ.ம.சா.ஆ 1 ஆகும்.** ஆர்.டி. பைனான்ஸ் தர்மராஜ் என்பவரிடம் எதிரியின் வெற்று காசோலைகள் பெற்று, அவரது பினாமியாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே தான் நான் தாக்கல் செய்தது பொய் வழக்கு என்பதால் என் மனைவி கொடுத்த ரூ.18,50,000/– நான் சட்டபடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அவ்வாறு எடுத்திருந்தால் இவ்வழக்கின் உண்மை நிலவரும் தெரியவரும் என்பதால்தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் என் மனைவியை சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> : இல்லை**

**Sd/– Tmt.A.K.Padmapriya,**
**Judicial Magistrate,**
**Kumarapalayam.**